உ

# சனிபகவான் தோத்திரமும்,

# நவக்கிரக தோத்திரமும்.



மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

கடவுள் துணை.

# சனிபகவான் தோத்திரம்.

——(*)——

காப்பு-வெண்பா.

தேவரெண்டிக்கதிபர் சித்தரொடுகிம்புருடர்
மூவர்முனிவர் முதலோரை—மேவியுறுந்
தாரணிந்தமார்பன் சனிபகவான்கதைபுகலக்
காரணிந்தயானைமுகன் காப்பு.

ஆதிவேதாந்தமுத லறியாஞான வைந்தெழுத்தினுட்பொருளை யயன்மாறேடும் சேர்திசிற்றம்பலத்திலாடி நின்ற சுடரொளியைநீபிடித்த தோஷத்தாலே, பாதிமதிசடைக்கணிய வரவம்பூணப் பதியிழக்கச் சுடலைதனிற்பாடியாடச் சாதியில்லாவேடனெச்சிற் றின்னவைத்தாய் சனியனே காகமேருந்தம்பிரானே, (க)

வேலவனைவேங்கமரமாக்கிவைத்தாய் விறகுகட்டுச் சொக்கர்தமை விற்கவைத்தாய், மாலினையேயுறவோடு கட்டுவித்தாய் வள்ளிதனைக்குறவாது வனத்தில்வைத்தாய், காலனைமார்க்கண்டனுக்கா வானுதைத்த காரணமு

நீபிடித்தகருமத்தாலே, சாலவுனையான்றெழுதே னென்னைத்தொடாதே சனியனே காகமேருந்தம்பிரானே. (௪)

மநுசுதவயோத்தியில் வாழ்தசரதன்றன் மக்களையும் வனவாசமாக்கிவைத்தாய் பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து பஞ்சுபடும் பாடதனைப் படச்செய்வித்தாய், எஞ்சலிலாவரிச்சந்திரன் பெண்டைவிற்றே யிழிகுலத்திலடிமையுற விசையவைத்தாய், தஞ்சமென்றேவுனைபணிந்தே னென்னைத்தொடாதே சனியனே காகமேருந்தம்பிரானே. (௫)

அண்டமாயிரத்தெட்டு மரசுசெய்த வடல்சூரபதுமனையு மடக்கிவைத்தாய், மண்டலத்தை யாண்டாளச் சக்ரவர்த்தி மனைவியொடு வனமதனி லலையச்செய்தாய் விண்டலத்தைபானுகோபன்றனாலே வெந்தணலாகச்சுரரை வெருவச் செய்தாய், தண்டனிட்டே னென்னாளுமென்னைத்தொடாதே சனியனே காகமேருந்தம்பிரானே.

அண்டர்கோன் மேனியிற் கண்ணாக் குவித்தாயயன்சிறத்தைவயிரவனாலறுப்பவித்தாய், திண்டிரல்கொள் கௌதமனாலகலிகைதான் சிலையாகச் சாபமுற்றே செய்வித்தாய், தண்டாரளநகையிரதி மாறன்றன்னைச் சங்கரனார் நுதல்விழியிற் றணல்செய்வித்தாய், சண்டமிலாதுனைத்தொழுதே னென்னைத்தொடாதே சனியனே காகமேருந்தம்பிரானே. (௬)

பாருலவுபருதியைப் பல்லுதிர்த்துவித்தாய் பஞ்சவர்க்குத்தூதுபீதாம்பரனை வைத்தாய், தாருலவுவாலிசுக்ரீபன்றம்மைத் தாரையினாற்றீராத சமர்செய்வித்தாய் சூரனெனுமிலங்கைராவணன்றன்றங்கை சூர்ப்பணகிமூக்குமூலை துணிசெய்வித்தாய், தாரணியுமார்பாவெனைத் தொடாதே சனியனே காகமேருந்தம்பிரானே (எ)

சுக்கிரன்றன்கண்ணிழந்தா னிலங்கையாண்டு துலங்குமிராவணன்சிரய கண்டிக்கவீழ்ந்தான், மிக்கபுகழிரணியன்றான் வீறழிந்தான் விளங்குதிரிபுராதிகளும் வெந்துமாண்டார், சக்கரத்தானுடலறுந்தான் சலந்தரன்றான் றுருகாசூரனுமே சமரின்மாண்டான், தக்கன்மிகச்சிமிழந்தானின் றோஷத்தாற் சனியனே காமமேருந் தம்பிரானே. (எ)

அந்தமுளவைங்கரன்கொம் பறமேசெய்தா யருமுனிவர்மனைவிகள் கற்பழியச்செய்தாய், சந்திரன்றன் கலையழிந்து தழைக்கச்செய்தாய் சங்கரனைப்பிச்சைதானெடுக்கச்செய்தாய், தந்திமுகச்சூரனுயிர் தளரச்செய்தாய் சாரங்கதரன்கரத்தை தறிக்கச்செய்தாய் சந்ததமுமுனைப்பணிவே னெனைத்தொடாதே சனியனே காகமேருந் தம்பிரானே. (அ)

சீதைதனையிராவணனாற் சிறைசெய்வித்தாய் தேவர்களைச்சூரனாற் சிறையிற்சேர்த்தாய், மாதுதுரோபதைதுயிலைவாங்குவித்தாய் மகேச்சுரனை யுமைபிரியம் வகைசெய்வித்தாய். போதிலயன்றானிற்றலை பூட்டிவித்தாய்

பொதியைமுனி யகத்தியனைப் பொருந்தச் செய்தாய், தாதுசேர் மலர்மார்பா வெனைத்தொடாதே சனியனே காகமேருந் தம்பிரானே (கூ)

அப்பர்தமைக் கருங்கல்லோ டலையிற்சேர்த்த யாரனடிபின் முயலகனையடங்கச் செய்தாய், செப்புமாணிக் கர்தமைச் சிறையிலிட்டாய் சிராமனைச்சவுரு வெடுக்கச் செய்தாய், ஒப்பிலனுமான்வாலி லொளித்தீயிட்டாயொ லிகடலினஞ்சையர னுண்ணவைத்தாய், தப்பிலாதுனை த்தொழுவே னெனைத்தொடாதே சனியனே காகமேரு ந்தம்பிரானே. (க0)

நீரினையுண்டெழுமேக வண்ணாபோற்றி நெடுந்த பக்திலறுகமலக் கண்ணாபோற்றி, சூரியன்றவத்தில்வந்த பாலாபோற்றி, காரியெனப்பெயர்களுப காராபோற்றி காசினியிற்கீர்த்திபெற்ற தீராபோற்றி, மூரிகொளுகோ ய்முகவாமுடவாபோற்றி முதுமகளின் முண்டகத்தாள் போற்றிபோற்றி. (கக)

முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# நவக்கிரக தோத்திரம்.

## காப்பு.

மண்ணுயிர்கட்கனைத்து மாறுதலித்துநல
நண்ணுநவக்கிரகநன்புசொலத்—தண்ணுலவு
திங்களணிதங்குமுடினர் செஞ்சடையருண்மகிழ்செய்
கங்கையருளிங்கரனர் காப்பு.

## சூரியன்.

காசினியிருளைநீக்குங் கதிரொளியாகியெங்கும்
பூசனையுலகோர்போற்றப் புசிப்பொடுசுகத்தைநல்கும்
வாசியேழுடையதேர்மேன் மகாகிரிவலமாய்வந்த
தேசிகாவெனைரட்சிப்பாய் செங்கதிரவனேபோற்றி.

## சந்திரன்.

அலைகடலதனினின்று மன்றுவந்துதித்தபோது
கலைவளர்திங்களாகிக் கடவுளரெவருமேத்துஞ்
சிலைமுதலுமையாள்பங்கன் செஞ்சடைபிறையாம்மேரு
மலைவலமாகவந்த மதியமேபோற்றிபோற்றி. (உ)

## செவ்வாய்.

வசனநற்றைரியத்தோடு மன்னவர்சபையில்வார்த்தை
புசபலபராக்ரமங்கள் போர்தனில்வெற்றியாண்மை

நிசமுடனவரவர்க்கு நீணிலந்தனிலளிக்கும், குலனில
மகனுஞ்செவ்வாய் குரைகழல்போற்றிபோற்றி. (௩)

புதன்.

மதன நூல்முதலா நான்கு மறைபுகல்கல்விமானம்
விதமுடனவரவர்க்கு விஞ்ஞைகளருள்வோன்றிங்கள்
சுதன்மாநிலத்தோரிச்சை சுகம்பலகொடுக்கவல்லன்
புதன்கவிபுலவன்சீர்சால் பொன்னடிபோற்றிபோற்றி

குரு.

மறைமிகுகலை நூல்வல்லோன் வானவர்க்கரசன்மந்திரி
நறைசொரிகற்பகப்பொன் னாட்டினுக்கதிபனாகி
நிறைதனஞ்சிவிகைமண்ணி னீடுபோகத்தைநல்கு
மிறையவன்குருவியாழனிருமலர்பாதம்போற்றி. (௫)

சுக்கிரன்.

மூர்க்கவான் சூரன்வாணன் முதலினோர் குருவாய்
வையம், காக்கவான் மழைபெய்விக்கும் கவிமகன்கனக
மீவோன், தீக்கவானவர்கள்போற்றச் செத்தவர்தமை
யெழுப்பும், பார்க்கவன் சுக்கிராச்சாரி பாதபங்கயமே
போற்றி. (சு)

சனி.

முனிவர்கடேவரேழும் மூர்த்திகள்முதலினோர்கள்
மனிதர்கள்சகலவாழ்வின் மகிமையதல்லாலுண்டோ
கனிவுளதெய்வநீயே கதிர்சேயேகாகமேறுஞ்
சனியனேயுனை துதிப்பேன்றமியனேற்கருள்செய்வாயே.

## இராகு.

வாருவோர் நெடுமான் முன்னம் வானவர்க்கமுதமீ யும், போகுமாக்காலையுன் றன் புனர்ப்பிணுற் சிரமேயுற் றுப், பாகுசேர் மொழியாள்பங்கன் பரன்கையில் மீண் டுப்பெற்ற, இராகுவேயுனைத்துதிப்பே னிட்கணமிரட்சி ப்பாயே. (அ)

## கேது.

பொன்னையி னுரத்திற் கொண்டோன் புலவர்தம் பொருட்டாலாழி, தன்னையேகடைந்துமுன்னந்தண்ண முதளிக்கலுற்ற, பின்னைநின்கரவானுண்ட பெட்பினிற் சிறம்பெற்றுய்ந்தா, யென்னையாள்கேதுவேயிவ் விருநில ம்போற்றத்தானே. (௯)

## பொது.

சூரியன் சோமன்செவ்வாய் சொற்புதன் வியாழம் வெள்ளி, காரியமிராகுகேது கடவுள ரென்பானுமத், தா ரியல் சக்கரத்தைத் தரித்திரர்பூசித்தாலும் பாரினிற்புத் திரருண்டாம் பாக்கியநல்குந்தானே. (௰)

## முற்றிற்று.